# முன்னுரை

**தீ**ம்தரிகிட இதழை நண்பர்கள் உதவியுடன் 1982ல் தொடங்கினேன். மறுபடியும் 1985ல். அடுத்து 2002ல். ஒவ்வொரு முறையும் சில இதழ்கள் வெளிவந்து பின்னர் நின்றுபோய்விடுவது வழக்கம். கடைசியாக வந்தபோது 51 இதழ்கள் வரை வெளியிட முடிந்தது.

தீம்தரிகிட போன்ற சமூகத்துக்கு தேவையான கறாரான ஒரு இதழ் நின்று போவதற்குக் காரணம் நமது சமூகத்தில் அயோக்கியர்களும் முட்டாள்களும் இருப்பதாகும். அயோக்கியர்கள் எண்ணிக்கையில் குறைவானாலும் அவர்கள் கையில் பண பலமும் அதிகார பலமும் இருக்கிறது. நல்லவர்கள் எண்ணிக்கை மிகப் பெரியதாக இருந்தாலும் அவர்களில் கணிசமானவர்கள் முட்டாள்களாக இருக்கிறார்கள். இந்த சமனை மாற்ற வேண்டுமென்றுதான் காலம் காலமாக எல்லா சமூக சிந்தனையாளர்களும் மனித நேயர்களும் முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அடுத்த தலைமுறையினருக்கு, கடந்த கால சரித்திரம் தெரிய வேண்டும். இன்று அரசியலிலும் மீடியாவிலும் கலாசாரத் துறையிலும் இருக்கும் பல பிரபலங்களின் அறிவுக் கூர்மையால் கவரப்பட்டு அவர்களைக் கொண்டாடுவது நடக்கிறதே ஒழிய, அவர்களின் உண்மையான சுயநல முகங்கள் திறமை என்ற ஒப்பனைக்குள் பத்திரமாக ஒளிந்துகொள்கின்றன. இந்த ஒப்பனைகளைக் கலைப்பதும் முகமூடிகளை நீக்குவதுமே ஒரு எழுத்தாளனின் வேலை.

தனிப்பட்ட முறையில் ஒரு பத்திரிகையாளனாகவும், தீம்தரிகிட இதழ் ஆசிரியனாகவும் நான் எப்போதும் இந்த சமூகத்தின் மனசாட்சியாக செயல்படவே முயற்சி செய்து வந்திருக்கிறேன். வெகுஜன இதழ்கள் பலவற்றிலும் நான் கடும் போராட்டத்தால் கிட்டிய கணிசமான சுதந்திரத்துடனே எழுதி வருகிற போதிலும், அவற்றில் எழுத முடியாத தொனியிலும், கருத்துக்களையும எழுதுவதற்கான களமாக தீம்தரிகிட தான் இருந்து வந்திருக்கிறது.

அப்படி சினிமா, இலக்கியம், ஒழுக்கம் போன்ற துறைகள் பற்றி 2002 முதல் வெளியான தீம்தரிகிட இதழ்களில் அச்சான கட்டுரைகளின் தொகுப்பு இது. நமக்கு சினிமா தேவை. இலக்கியம் தேவை. ஒழுக்கம் தேவை. ஆனால் எப்படிப்பட்ட சினிமா, எப்படிப்பட்ட இலக்கியம், எப்படிப்பட்ட ஒழுக்கம் என்று நாம் யோசிப்பதும் பிறரை யோசிக்கவைப்பதும் அவசியம். இந்தக் கட்டுரைகள் அப்படிப்பட்டவை. படித்து யோசித்து உங்கள் கருத்துக்களை உங்கள் குடும்பம் முதல் அலுவல் வரை எல்லா வட்டங்களிலும் விவாதியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து நீங்கள் எனக்குக் காட்டும் அன்பே என்னை ஓயாமலும் தலை சாயாமலும் காப்பாற்றி வருகிறது.

**சென்னை-41 (முதல் பதிப்பின் முன்னுரை)**